News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

Vol: 155 Jaffna, Friday 30 September 1994 No. 21

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
THE MANAGER

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## 47th Anniversary of the C.S.I.

The Jaffna Diocese celebrated the 47 th Anniversary of the Church of South India ( traditionally known as Diocesan Festival or October Festival) on the 24th of September 1994 at the Cathedral Church, Vaddukoddai. The day began with a Communion Service according to the choral liturgy.The celebrant and preacher was the Rt. Rev. Dr. S. Jebanesan. The Bible lessons were read by Mr. G. Rajanayagam, Principal of Jaffna College, Mrs. V. Ratnathaya of Erlalai North and Rev. E. N. Lawrence of Chavakachcheri Parish.

The Bishop based his sermon on 2 Kings 6:8-17. He said how Elisha and his servant were surrounded by the armies of King Aram and the servant was afraid. But Elisha told him not to be afraid and prayed to God " Lord open his eyes and let him See ". The Lord opened the young man's eyes and what he saw was not the army but " hills covered with horses and chariots of fire all round Elisha". He went on to say what God can do for us even in such situations if only we had Elisha's faith and complete trust in the Lord. The C. S. I., a coming together of various denominations, in the face of opposition, was looked upon as a miracle and has been an example to the rest of the Christian World. It will have its weaknesses and faults but faith like Elisha's will enable the Church to grow from strength to strength.

Bishop Jebanesan was assisted by the Revds. V. Rajkumar, P. R. Navendranugoolan, T. Thevanesan and E.P. Solomon in celebrating Holy Communion

The combined orchestra band of the Uduvil Girls' College and Jaffna College ably trained and accompanied by Mrs. S. V. Jebanesan played before and at the beginning of the service.

The highlights of the day were the debate in the morning (Patti Mantram) and a drama competition after lunch. The debate was on the proposals of the Synod liturgy committee to bring about the following changes in the present marriage service order, namely:

1. At the wedding service the priest should not ask the congregation to let him know if any one had any objection to this marriage about to be solemnized
2. The words "until death do us part" should have no place in a marriage service order.
3. That instead of the father giving his daughter( bride ) in marriage both parents of both bride and groom to give them in marriage.
4. Where the woman says " to obey " should be deleted. ( Note - The Jaffna Diocese had already deleted this sometime back )

The Rev. D. S. Thiagarajah, Principal of Christian Theological Seminary, Maruthanamadam was the Chairman,Coordinator and Judge The Revds. V. Rajkumar and Mrs. A. R. Thampiyappa led by the Rev A. Jeyakumaran supported the proposed changes while the Rev ( continued to page 4 )

### The Rev Dev. Anandarajan Master of Theology

We congratulate the Rev. G. Dev Anandarajan of our Diocese on his obtaining the M. Th. degree of the Serampore University in the Second Class. Mr. Anandarajan followed a two years post graduate course at the United Theological College Bangalore from 1992 to 1994 in the field of the Old Testament. He is now on the full time Staff of the Christian Theological Seminary, Chunnakam.

### The Rt. Rev. Richard Lipp Founder of the KNH

We regret to record the death of Bishop Lipp at his home in Wurtemburg, Germany in June this year.

Bishop Lipp came out to South India as a Missionary of the Basel Mission and in 1947 when the Churches of the Mission became part of the Church of South India was consecrated Bishop of the North Kerala Diocese.

It was during his ministry in the North Kerala Diocese that he initiated the programme of families in Germany Sponsoring poor children in his Diocesan area. The Project grew to such an extent that on his retirement Bishop Lipp floated the idea of an organization. The Kindernothilfe ( K.N.H. ) was the result. He was the first Chairman of the organization and built it up on a sound footing. Today K N H supports children in Homes and Day Care Centres in many countries including Sri Lanka

### Dr. Subramaniam Ponnambalam

Dr. Ponnambalam, the well known and popular general surgeon, died in Colombo, on the 16th of September. The funeral took place on the following day. He was 66 years old He qualified as a doctor in 1958, and later worked in England and obtained the Fellowship of the Royal College of Surgeons of Edinburgh. He joined the Staff of General Hospital, Jaffna in 1976, and had continued to serve there.

(Continued to page 4)

## ON THE POLITICAL FRONT

While plans are being made for the government and the Tamil Liberation Tigers to come together for talks, hopefully next week, attacks are taking place here and there. After Madam Chandrika Kumaratunge became Prime Minister, there have been no air attacks and shelling had gradually ceased. But Naval attacks almost daily on innocent fishermen have been resulting in deaths and injuries. The people of Jaffna who had at last come to live without fear of bombing and shelling were taken aback on Sunday the 25th September by the offensive in Vadamarachy and Valikamam East. News is to hand that the Armed Forces had moved 9 KM through Valalai and Kathiripai towards Atchuvely well fortified and with helicopter and bombers attacking from the air. It is reported that 6 civilians died about 35 people were injured and 30 houses laid low. The Armed Forces are said to have lost two officers and two soldiers while Tigers have lost four of their cadre as they fought against the advancing army whom they claim to have successfully repelled.

( continued to page 4 )

### Good News to Readers

The Morning Star will be published weekly on every Friday.

### OBITUARY

It is with regret we record the sudden death of Dr. Joshua Navaratnam of Colombo Church. Details of his funeral will appear in the following issue of the Morning Star.

## EXTENSIVE DAMAGE TO ATCHUVELI CHURCH

Extensive damages were caused to the J. D. C. S. I. Atchuvely Church by the direct hit of a rocket hurled by the Sri Lankaa Military at Palaly. Main beam of the roof was broken and many tiles were blown off, Rev. Thevakaran, the Pastor of the Church had a narrow escape Two Hindu temples were also damaged.

The Sri Lankan Army, from Palaly attempted to advance towards Atchuvely backed by helicopters and bombers. Shells were also hurled towards civilian targets. Rockets were fired at civilians who tried to escape the scene, according to the eyewitnesses. Six civilians were killed and many wounded of which 35 were seriously injured Four LTTE men and four

(Continued to page 4)

# வரணி பண்ணை

## திரு. யா. றி. இராசரத்தினம் நினைவாக

காலஞ் சென்ற திரு. யா. றி. இராசரத்தினம் நினைவாக வரணியில் 06-08-94 இல் நன்றி செலுத்தும் வழிபாடு ஒன்று நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு அருட்திரு ஏ வீ யேசுதாசன் தலைமை தாங்கினார். அவர் தன தலைமையுரையில் "தனக்காக வாழாது பிறர்க்காக வாழ்ந்த ஒரு பெரியாரை நன்றியுடன் நினைவுகூர்வது அவசியம்" என்று பகர்ந்தார். அருட் திரு. எட்வேட் நயினார் லோறன்ஸ் "வரணி பண்ணை" ஆரம்பமாகக் காரணமான திரு. யா. றி. இராசரத்தினம் அவர்கள் தன்னை யா. றி. இ. என அழைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைவார் எனவும் அந்த மூவெழுத்துக்கள் இன்னும் வீட்டுப்படலையில் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

1971ஆம் ஆண்டு எமது முன்னாள் பேராயர் பேரருள் திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் வரணி சபையைச் சந்தித்த போது திரு. யா. றி. இராசரத்தினம் "நீங்கள் பேராயராக வந்தால், வரணியில் அடர்ந்த காடாக இருக்கும் மிஷன் காணியில் ஒரு பண்ணையை ஆரம்பிக்க வேண்டும்" என்று விடுத்த வேண்டுகோளை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார்; அவர் பேராயராக வந்த பின்பு இந்த மிஷன் காணியில் காடுகளை வெட்டி திருத்தங்கள் செய்து தென்னங்கன்றுகள் நாட்ட நடவடிக்கை எடுத்தார். இவற்றைப் பராமரித்து மேற்பார்வை செய்யும் பொறுப்பை திரு. யா. றி. இ. எடுத்தார். இக் கன்றுகளின் வளர்ச்சியில் உறுதுணையாய் நின்றோர் இன்றும் வரணியில் உளர்.

அடுத்த கட்டமாக "கோழிப் பண்ணை" ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் பன்றி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகியனவும் ஆரம்பிக்கப்பட்டன. ஆடுகளும் வளர்க்கப்பட்டன. முன்பு வரணியில் இயங்கி, பின்பு உடுப்பிட்டிக்கு மாற்றப்பட்ட தற்போதைய உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பாடசாலையின் அத்திவாரங்களில் தான் கோழிப்பண்ணைக் கட்டிடங்கள் போடப்பட்டது. இம்முன்னேற்றங்களின் மத்தியில் "இரத்தின அப்பா" என்றழைக்கப்படுகிற திரு. இரத்தினம் லோறன்ஸ் அவர்களின் காணி மிஷனால் வாங்கப்பட்டு, இரண்டு மாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டு, கோழிப்பண்ணை வளர்ச்சியடைந்தது. தற்போதைய குருமனை வாங்கப்பட்டதுடன், கோழித்தீன் செய்தொழிற்சாலையும் அவ்வளவில் அமைக்கப்பட்டது. மின்சாரம் போன்ற சகல வசதிகளுடன் வரணி பண்ணை இயங்கி வந்தது. மேலும் பாறி வளவைத் தொடர்ந்த காணியும் கட்டிடத்துடன் விலைக்கு வாங்கப்பட்டது. இப்படியாக வரணிப்பண்ணை வளர்ந்து விருத்தியடைய ஆரம்பித்தது. யாழ்ப்பாணத்தில் நவீன சந்தையில வரணிப் பண்ணைக் கடை திறக்கப்பட்டு இப்பண்ணை உற்பத்திகள் விற்பனை செய்யப்பட்டன. இது தொடர்ந்து நடைபெறுவது குறிப்பிடத்தக்கது தென்னந்தோப்பு, கோழிப் பண்ணை என்பன வரணி மிஷன் பண்ணைக்கு அதிக லாபம் ஈட்டித் தந்தன.

அருட் திரு. எஸ். ஜெயநேசன் அருட் திரு இராஜகுலேந்திரன், அருட் திரு. எஸ் சி. ஆனல்ட் வரிசையில் இப்போது அருட் திரு. ஏ. வீ. யேசுதாசன் போதகர் தனது அயராத உழைப்பிலும் முயற்சியிலும் இப்பண்ணையை அதிக லாபத்துடன் இயக்கி வருவது கண் கூடு

1975ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1ஆம் திகதி திரு. யா. றி. இராசரத்தினம் மறுமைக்குள் அழைக்கப்பட்டார்.

இன்று வரணிப்பண்ணையின் முன்னேற்றம், லாபம் என்பவற்றை நோக்கிடும் போது திரு. யா. றி. இராசரத்தினம் அவர்களுக்கும், முன்னைய பேராயர் பேரருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்களுக்கும் தற்போதைய பேராயர் பேரருள் திரு. அறிவர். எஸ். ஜெபநேசன் அவர்களுக்கும், தற்போது இதன் ஊழியர் அருட் திரு. ஏ. வீ யேசுதாசன் அவர்களுக்கும் இங்கு முன்னர் பணி புரிந்தோருக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா வல்ல இறைவனுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

- அருட்திரு. எட்வேட் நயினார் லோறன்ஸ் -

# ஆண்டு விழா

சத்தியபுரம் திருச்சபை தனித்து இயங்கத் தொடங்கிய 10ம் ஆண்டு நிறைவு விழா இம் மாதம் 17, 18, 19, 22ம் திகதிகளில் புதிதாக வாங்கப்பட்ட காணியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. முதலாம் நாள் நிகழ்ச்சிகள் 17ம்திகதி மாலையில் சபை ஊழியன் திரு இ. அருள் பாலனின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது. இன்றைய நாளில் கிறிஸ்தவ இறையியல்கல்லூரி முதல்வர் அருட் திரு டி எஸ் தியாகராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு "கிறிஸ்தவ நற்செய்தியும் எம் அழைப்பும்" என்ற பொருளில் திருமறைப் படிப்பை நடாத்தினார் அதன் பின் திரு ரி.ஏ தம்பியப்பா அவர்களும் அராலி சபை ஊழியன் திரு டி.எஸ் மதியாபரணமும் தங்களது ஆசியுரையை வழங்கினர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 18ம் திகதி பெண்கள் ஐக்கியத்தால் நடத்தப்பட்டது. இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ் ஆதீன பெண்கள் ஐக்கியத் தலைவி திருமதி S. V. ஜெபநேசன் கலந்து கொண்டு உரையாற்றும் போது சத்தியபுரம் சபையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெண்களினதும் வாலிபர்களினதும் பங்கு அளப்பரியது என்றும் இச் சபையின் பாடல்கள் எங்கும் பிரபல்யமானது என்றும் கூறினார். பின்னர் வட்டார சபைகளாக உடுவில் இணுவில் தேவகிராமம் பெண்கள் ஐக்கியத்தினரும் கலந்து கொண்டு சிறப்பித்து கலை நிகழ்ச்சிகளையும் வழங்கினர் சத்தியபுரம் பெண்கள ஐக்கியம் மனம் மாறிய மைந்தன் வில்லுப்பாடலை வழங்கினார்கள் இன்று சபையின் வருடாந்த விற்பனவு விழாவும் நடைபெற்றது இவ் விழாவை பிரதம விருநதினர் ஆரம்பித்து வைத்தார். பெண்கள் ஐக்கியத்தினரின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வாலிபர்களுக்கான நிகழ்ச்சிகளைத் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி விரிவுரையாளர் அருட்திரு G. D. ஆனந்தராஜன் நடாத்தினர்.

மூன்றாம் நாள் கூட்டங்கள் மாலை 4 00 மணிக்கு பேராயர் மகாகனம் அறிவர் S. ஜெபநேசனையும், சிறப்பு பேச்சாளர்களையும், ஊழியர்களையும் சபைப்பிள்ளைகளையும் பான்ட் வாத்திய இசையுடன் திருச்சபை நிலையத்திலிருந்து புதிய காணிக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பகிரங்கக்கூட்டம் ஆரம்பமாகியது. இக்கூட்டம் சேகர ஊழியன் அருட்திரு A. ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சபை ஊழியன் திரு இ. அருள்பாலன் சிறப்பு விருந்தினராக திரு S. P ஜீவானந்தம் அருட் (திருமதி) A R தம்பியப்பா வாலிபர் சங்கத்தின் சார்பில் செல்வி வினோதரஜனி சிவஞானம் முன்னை நாள் பேராயர் மகாகனம் D J: அம்பலவாணர் பேராயர் அறிவர் S ஜெபநேசன் ஆகியோர் சத்தியபுரம் திருச்சபைக்கு ஆசியுரை வழங்கினார்கள். பின்னர் சபைச் செயலாளர் திரு S J. பத்மாசலம் நன்றியுரை வழங்கினர் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன இதில் வாலிபர்களினால் மேடையேற்றப்பட்ட "எதிர்பார்ப்புகள்" என்ற நாடகம் அநேகரின் வரவேற்பைப் பெற்றது.

நான்காம் நாள் கூட்டங்கள் சத்தியபுரம் திருச்சபையின் ஸ்தாபக நளாகிய 22ம் திகதி மாலை 4,30 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனையும் திடப்படுத்தல் ஆராதனையும் நடைபெற்றது. இவ் ஆராதனையில் 12பேர் திடப்படுத்தல் பெற்று சபையில் புதிதாக சேர்ந்து கொண்டனர். இப் பிள்ளைகளுக்கு திடப்படுத்தல் ஆராதனையை மகாகனம் அறிவர் எஸ் ஜெபநேசன் நடாத்தினார். ஆராதனைக்கு உதவியாக அருட்திரு ஏ ஜெயக்குமாரன் இருந்தார். ஆராதனை முடிவடைந்ததும் புதிய காணியின் பேராயர் மகாகனம் அறிவர் எஸ். ஜெபநேசன் பரநடுகையை ஆரம்பித்து வைத்தார் சபையார் யாவருக்கும் இரவு ஐக்கிய போசனம் வழங்கப்பட்டது இக் கூட்டங்களில் நூற்றுக கணக்கான மக்கள் கலந்து கொண்டனர் இந்த நான்கு நாட்களும் சத்தியபுரம் கிராமமே விழாக் கோலம் பூண்டிருந்தது இத் திருச்சபையின் 10ம் ஆண்டு நிறைவு விழா மலர் ஒன்று அச்சிடப்பட்டு ஆதின ஆண்டு விழாவில் சபை ஊழியனால் முன்னை நாள் பேராயருக்கும் புதிய பேராயருக்கும் கொடுத்து வெளியிடப்பட்டது.

# பகல் பராமரிப்பு நிலைய விளையாட்டுப் போட்டிகள்

### ஜெயபுரம்

தென்னிந்திய திருச்சபையின் ஜெயபுர பகல் பராபரிப்பு நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி யூன் மாதம் நடைபெற்றது. சபை ஊழியன் சகோ. பி. தேவராசா அவர்கள் இதற்கு தலைமை தாங்கினார்; பிரதம விருந்தினர்களாக சேகரக்குரு அருள்திரு. ரீ. தேவநேசனும் பாரியாரும் கலந்து சிறப்பித்தனர். இதில் கௌரவ சிறப்பு விருந்தினர்களாக உடன் ஊழியர்களும், விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்களும் பல பெரியார்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது பிரதம விருந்தினர் தனதுரையில் 'பிள்ளைகள்' வளர்ச்சி சமுதாய வளர்ச்சி என்னும் ஆரம்ப அத்திவாரமே கட்டிடத்தின் முக்கியம் என்பது போல பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியிலேயே அவர்களின் வளர்ச்சி தங்கியுள்ளது." எனவும் குறிப்பிட்டார். பூநகரி, ஜெயபுரம் பாடசாலை அதிபர்கள், வைத்தியக் கலாநிதி என் போரும் உரையாற்றினர். பிள்ளைகளுக்கான பரிசில்கள் திருமதி. தேவநேசனால் வழங்கப்பட்டது. நன்றியுரையை பராமரிப்பாளர் செல்வி எம். அனுலா கூறினார்.

### வன்னேரிக்குளம்

தென்னிந்திய திருச்சபையின் வன்னேரிக்குளம் பகல் பராமரிப்பு நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி 9.7.1994 அன்று முதன் முறையாக நடைபெற்றது. இந்

(3-ம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு பாதை

ஆனையிறவுப் பாதையூடாக பொருள்கள் எடுத்து வருவதுபற்றி ஸ்ரீலங்கா அரசாங்கம் தலைவர் பிரபாகரனுக்கு செய்தியனுப்பியதாக செய்திகள் கூறுகின்றன. இதற்கான பதில் கிடைக்குமிடத்து பாதை திறப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தாரகை ஒளி

மனிதனின் பேச்சுக்கள், அவனின் எண்ணங்களையும் மிஞ்சி விடுகின்றன.


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை

Estd. 1841

மலர்: 155 30 - 09 - 1994 இதழ்: 20


## அமைதி வேண்டும்

நமது புதிய பிரதமர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா கண்ணியம் கடமை கட்டுப்பாடு உடையவர் தாம் சொன்னதைச் செயற்படுத்தும் செயல்வீரா! எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சாதவர், துணிவுடன் நாட்டின் நலனுக்காகச் செயலாற்றும் திறமை படைத்தவர் எத்தகைய இடையூறுகள் இடைஞ்சல்கள் குறுக்கிவிட்டாலும் எதிர் நீச்சலடித்து தன் இலக்கை அடையும்வரை அயராது உழைப்பவா, நாட்டில் அமைதி நிலவவேண்டும- அமைதிக்காக அனைவரும்- சாதி சமய, இனவேறுபாடின்றி ஒருங்கிணைந்து உழைக்க முன் வரவேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார் நம் பிரதமர்.

பிரதமர் சந்திரிக்கா- அரசியலுக்குப் புதியவர்தான் ஆயினும் எண்ணித்துணிக கருமம் எனும் வள்ளுவர் வாக்குக்கிணங்க நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக அமைதிக்காகத் தான் செய்ய எண்ணியுள்ள செயல்களை நன்கு சிந்தித்து தெளிந்த புத்தியோடு துணிந்து செயலாற்றி வருகிறார். இதனைக் கடந்த ஒரு மாதத்திற்குள் நாம் கண்டு அனுபவித்துள்ளோம்.

கடந்த பதினேழு ஆண்டுகளாக ஐ. தே க. ஆட்சியின் கீழ் சொல்லொணாக் கஷடங்களை அனுபவித்து வேதனையில் சூழ்ந்து தத்தளித்துக் கொண்புருந்த மக்கள குறிப்பாகப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தங்களுக்கு விடிவு தரக்கூடிய அரசு மலர்ந்துவிட்டதென நம்பிக்கையுடன் சந்திரிக்கா அம்மையாரின் அரசை மகிழ்வுடன் ஏற்க முன்வந்துள்ளனர்.

தமிழ் மக்களும் குறிப்பாக விடுதலை இயக்கத்தலைவர்களும் பிரதமரின் நல்லெண்ணச் செயல்களை நன்நம்பிக்கையுடன் வரவேற்றனர். இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண மக்களின் அடிப்படைத்தேவைகள் வழங்கப்படுவதோடு நாட்டின் அமைதி (போர் நிறுத்தம்) நிலைநாட்டச் சந்திரிக்கா அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் என்ற நம்பிக்கையோடு தம் ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளனர்.

எத்தகைய தடை ஏற்படினும் இனப்பிரச்சனைகளுக்கு சமாதான தீர்வுகாணும் முயற்சியை அரசு ஒருபோதும் இடைநடுவில் கைவிடாது சமாதான முயற்சியை மேற்கொள்ளுவதில் அரசு மிக உறுதியாக உள்ளது என அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கூறினார். இக்கூற்று சிறுபான்மை மககளுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது என்பதில் ஐயமில்லை,

சந்திரிக்கா அரசு புதிய வீச்சுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி விஜயதுங்காவும் இராணுவ அதிகாரிகளும் முட்டுக்கட்டையாக இராமல் நாட்டில் அமைதியை நிலைநாட்டும் பணியில் பிரதமருடன இசைந்து இணைந்து இணங்கிச் செயற்படுவார்களென நம்புகிறோம் இந் நாட்டில் நீதியான சுத்தமான திறமையான அரசாங்கத்தை உருவாக்க உதவவேண்டும்.

இலங்கை தமிழ் மக்கள் அனைவரும் எவ்வித பயமுமின்றி சமாதானத்துடன் தமது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுப் பொலிவுடன் வாழ்வதற்கான வழிவகைகளை வகுக்கவும் மீண்டும் இலங்கைத் தீவு இந்திய சமுத்திரத்தின் முத்தாக மிளிரச் செய்யவும் பிரதமர் சந்திரிக்கா திடசங்கற்பங் கொண்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நம் நாட்டுச் சமயத் தலைவர்கள் பிரதமர் சந்திரிக்காவின் தலைமைத்துவத்தை உற்று நோக்குவது நல்லது சிலர் தாம் பெற்ற பதவிகளை அலங்கரிக்கிறார்கள். வேறு சிலர் தமக்குக் கிடைக்கும் பதவிகளால் அலங்கரிக்கப்படுகின்றனர். பிரதமர் சந்திரிக்கா முதலாவது ரகத்தைச் சேர்ந்தவர். எனவே பதவிமோகமின்றி நாட்டின் முன்னேற்றத்திற்காக நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்படுவதற்காக அனைத்து சமயத் தலைவர்களும் ஒன்று பட்டு இயேசுபிரானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அயராது சலியாது உழைக்க முன்வரவேண்டும் என்பதை இங்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறோம்.

## தென் இந்திய திருச்சபை தேவாலயம் ஷெல் வீச்சில் சேதம்

கடந்த ஞாயிறு பலாலியிலிருந்து ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலில் தென் இந்திய திருச்சபையின் தேவாலயம் பலத்த சேதத்துக்குள்ளானது. அருட்திரு தேவசுரன் மயிரிழையில் தப்பினார் இத்துடன் இரண்டு இந்து ஆலயங்களும் சேதமடைந்துள்ளது சிறீலங்கா இராணுவம் அச்சுவேலிபகுதியினூடாக முன்னேற முயன்ற போது இச் சம்பவம் நடைபெற்றது. பொது மக்களின் குடியிருப்புக்களை நோக்கி ஏவப்பட்ட றொக்கற்றுகள் தப்பியோடிய பொதுமக்களைத் தாக்கியதால் 6 பேர் உயிர் இழந்தனர் 35 பேர் வரை படுகாயம் அடைந்தனர்.

ஆறு மணி நேரம் நீடித்த போரில் நான்கு போராளிகள் உயிரிழந்தனர் இரு உயர் அதிகாரிகள் உட்பட நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இறுதியில் இராணுவத்தினர் தமது பழைய நிலைக்குத் துரத்தப்பட்டுள்ளதாக செய்திகள் மூலமாக அறிகிறோம்.

——

## விளையாட்டு போட்டி

தென் இந்திய திருச்சபையினால் நுனாவிலில் நடாத்தப்படும் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி 1 9 94 மாலை 2 30 மணியளவில் நடைபெறும் இதற்கு அருட்திரு A. ஜெயக்குமாரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி ஜெயக்குமாரன் அவர்கள் சான்றிதழ்கள் வழங்குவார்.

### பகல் பராமரிப்பு......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுக்கு ஜெயபுரம் சபை ஊழியன் சகோ. பி,தேவராசா தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக வன்னேரிக்குள அரசினர் வைத்திய அதிகாரி கலாநிதி எஸ் முருகானந்தம் அவர்கள் கலந்து கொண்டார். கௌவர விருந்தினர்களாக விடுதலைப்புலிகள் இயக்க முக்கியஸ்தர்களும் பல பெரியார்களும் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினர் தனது உரையில் நிலைய ஆரம்பத்தினையும் அதன் வளர்ச்சியையும் வியந்துரைத்தார். இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. பரன்தரன் அவர்களும் கிராமசேவையாளரும் உரையாற்றினர். பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார். நன்றியுரை நிலையப் பராமரிப்பாளர் செல்வி கே. மிதுலாவால் வழங்கப்பட்டது.

### குடத்தனை - வரணி

தென்னிந்திய திருச்சபை கனேடிய கிறிஸ்தவ சிறுவர் நிதியத்தினால் குடத்தனையில் நடாத்தப்படும் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தின் முதலாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி 1 10 94 மாலை 3 30 மணியளவில் ஆரம்பமாகும்.

இதற்கு அருட்திரு A ஜெயக்குமாரனும் திருமதி ஜெயக்குமாரனும் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்கள் இதே தாபனத்தினால் நடாத்தப்படும் வரணி பகல் பராமரிப்பு நிலையத்தில் வருடாந்த விளையாட்டுப் போட்டி 8 10 94 வரணியில் நடைபெறும்,

——

## சமாதானப்பேச்சுக்கு ஓர் அத்திபாரம்

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட சிறிலங்கா அரசின் தூதுக்குழு ஒக்டோபர் 13ம் 14ம் திகதிகளில் யாழ்ப்பாணம் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது இவர்கள் தங்கள் சந்திப்பின்போது பிரதமர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கவுக்கும் விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே பிரபாகரனுக்குமிடையிலான பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரல் பற்றியும் ஆராய்வர்

சமாதான பேச்சுமுடிவடைய ஒரு வருடகாலம் எடுக்கலாம் என் பிரதமர் கூறியுள்ளார். பேச்சில் முன்னேற்றம் காணுமிடத்து போர் நிறுத்தத்திற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

——

## மறுமைப்பிரவேசம்

திருமதி எம்.பி. கிங்ஸ்பெரி உசன் திருச்சபையை சேர்ந்தவரும் காலஞ்சென்றலில்லிகிங்ஸ்பெரிஅவர்களின் பாரியாரும் ஆகிய திருமதி மேரி கிங்ஸ்பெரி சென்ற திங்கள் 26.9.94 யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையில் மறுமைக்குள் பிரவேசித்தனர் அன்னாரின் நல்லடக்க ஆராதனை உசனில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்றது. இவ்வாராதனையைஅருட்திரு ஏ.வீ.யேசுதாசன் அவர்களும் அருட் திரு எட்வேட் லோறன்ஸ அவர்களின் உதவியுடன் நடாத்தினார்கள் அன்னாரின் பூதவுடல் உசன் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

——

மரணம்:-

## திரு. M தம்பித்துரை

திரு. M. தம்பித்துரை 28 9 94 மறுமைக்குள் பிரவேசித்தார், இவர் உடுவில் சபையின் அங்கத்தவரும் யாழ்ப்பாண Y. M. C. A. யின் முன்னாள் செயலாளருமாவார். இது பற்றி விரிவான செய்தி அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும். அவரது குடும்பத்தாருககு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

——

## டாக்டர் பொன்னம்பலம் கொழும்பில் காலமானார்

அறுவைச் சிகிச்சையில் பிரபல்யம் பெற்ற டாக்டர் க. பொன்னம்பலம் இம்மாதம் 16ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

THE MORNING STAR

Diocesan Office, Vaddukoddai 30. 09 . 1994

EDITORIAL

# THE CHURCH OF SOUTH INDIA 47th ANNIVERSARY

Throughout the 21 Dioceses of the Church of South India and in many other places there will be Services of Thansgiviug during this part of the year to mark the 47th Anniversary of the Inauguration of the Church of South India on the 27 th of September 1947. The Jaffna Diocese held its anniver sary Thanskgiving Service led by Bishop Jebanesan at the Cathe- dral Church, Vaddukoddai on Saturday the 24 th of September this year.

Anniversaries are occasions when we are summoned to look back with gratitude at what God has done and reevaluate the past with a view to seeing more clearly our tasks in the light of the challenges and opportunities of our own day. " The reading of Church history is a cordial for drooping spirits ". wrote Bishop J. B. Lightfoot and yet another histo- rian added. " it ought to be a bracing tonic. " Anniversaries then can be a way of celebrating the past with ' cordial ' or ' tonic ' and of bracing ourselves to move forward into a greater future.

The Church of South India-a union of Congregational, Presbyterian, Reformed, Methodist and Anglican Churches at its inauguration consisted of 14 Dioceses with a membership of about nine hundred thousand. Today its membership has grown to above two millions distributed among 21 Dioceses. " Unity for Mission " was the rallying cry of those who worked hard to overcome our " sinful divisions " . It could therefore be legitimately asked if the hope of the pioneers of the Church Unity movement or for that matter if the prayer of our Lord himself, " that they all may be one...... that the world may believe ". has in any measure been realized. The leaders of the C. S. I. will be the first to confess how far the Church has failed in its expectations. However, every Diocese will also today give thanks to God for the numerous ways in which the Lord of the Church has used it as an effective instrument of His mission and blessed its life and work.

It was hoped that the Inauguration of the C. S. I. will lead to wider union among other Churches as well. Once again one cannot but express grief and disappointment that it has not happened to the extent it was hoped. However, the inaugura tion of the Church of North India, the Church of Pakistan and the Church of Bangladesh as United Churches are a matter for rejoicing. During the last 47 years many more unions bet- ween Churches of similar ecclesiastical polity did take place throughout the world although not as varied as episcopal and non-episcopal churches, as in the case of the Unions in the Indian Sub-Continent. The question may be asked if the Church Union movement has lost its steam

During the last 47 yeaes there has been a great shift in the understanding of the Church's misson. Mission must be understood in relation to God's plan for all humanity, indeed for the whole cosmos rather than in terms of the numerical strengthening of the Church's membership. God's gift of His Son, St. John reminds us was because " He so loved the World." It is the world and its new creation, of " all things becoming new " that God is concerned with and the mission of the Church is to partake in and be an agent of this new creation. Mission therefore involves the radical transformation of human beings as individuals and as communities, it involves justice and peace in society and in the community of nations. It involves development that aims at the realisation of the fullness of humanity for individuals and communities. It involves the struggle ag nst all forms of oppression and the elimination of pov- erty in particular. It involves the problems of Ecology and the integrity of creation. What relevance has Church Union it is being asked for mission in this total global perspective. It may further be argued that Churches in Union negotiation run the danger of being buried in a narcissist exercise.

The leaders of the Churches can easily lose their nerve when confronted with those staggering problems. The cause of Church Union itself may appear to be irrelevant. It is however, precisely in this global context that the Church today is challenged to see its role and rethink its mission. God " has made known to us his secret purpose" writes the author to the Ephesians," namely, that the univese, everything in heaven and earth,might be brought into a unity in Christ ' ( Eph 1:9-10) It is this unity of which the Church is called to be a foretaste and first fruit in history. A divided Church has no message for a divided world. The challenge therefore is all the more for Churches "not to be weary in well—doing" and press on in the path of reconciliation and unity.

## 47th Anniversary

( continued from page 1 )

V. N. Tharmakulasingam and Miss Joyce Gunadevi,a final year theological student led by the Rev G. D. Anandarajan debated and argued that there is no need for these changes in the marriage service of order. The Chairman with his witty introductions and comments and those who took part by their clever arguments for and against the changes kept the audience enthralled. The Rev. A.Jeyakumaran and the Rev V. N. Tharmakulasingam were commen- ded by the Chairman for the way they presented their arguments.

(Continued next week)

## Damages Atchuvely Church

( continued from page 1 )

Army personnel including two high ranking officials were killed in the battle.

The Army were driven back to their original positions after severe fighting which lasted six hours, according to local news papers.

## On the Political Front......

( continued from page 1 )

Such incidents raise doubts as to how serious the govern- ment is about peace negotiations.

The Catholic Bishop of Jaffna the Rt Rev. Thomas Saundaranayagam has appealed to the government of India that they should not act in any way that will disrupt the coming peace talks between the Sri Lankan government and the Tigers of Tamil Eelam. He has explained that the hostile fee- lings of the Jaffna Tamil against Indian government were largely due to operation of the Indian Peace Keeping Force between 1987—1990.

## OBITUARY

It is with deep sorrow we record the death of Mr. M. Thambithurai of Uduvil, on 28.9.94 in Jaffna. He was General Secretary of theY M C A Jaffna for over 25 yrs, and held several offices in the Various Boards & Committees both in the Diocese and in the N. G. O's. Details regarding his Funeral will apper in follow- ing Issue and we extend onr deepest sympathies to his family members.

## Dr. Ponnambalam

( continued from page 1 )

even after he reached his age of retirement, till ill health forced him to go to Colombo in February this year. He also taught surgery to students of the Jaffna Medical College.

He was a humble God- fearing,man of the soil,who gave his time and skills in the service of the people of the North. He worked round the clock, during the two wars in the North, and had carried on courageo- usly and single handed, even during and after the massacre at the hospital, by the IPKF, helping to keep up the morale of the staff and the hospital open. He was a man who had compa- ssion and treated all of his pati- ents alike.He was so duty-con scious so much so, that even on his wedding day, he was back at the hospital operating.

He was a good friend of Green Memorial hospital. We at Green Hospital, are indebted to him, for operating on our patients whenever requested to do so, and for holding consultation clinics here He would often drop in to say ' Hello ' on his way to his home village.

Registered as a News Paper at the G.P. O. Sri Lanka under No. Q/J/140/89. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 30th of September 1994 and published by Mr. T. A. Tambiappa, Diocesan Office, Vaddukoddai.